ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி ॥

ராஜகோபாலதாஸன் அருளிச்செய்த

# ॥ வர வேண்டும் கண்ணா ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்கராமாநுஜ மஹாதேஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

# ॥ வர வேண்டும் கண்ணா ॥

வர வேண்டும் கண்ணா நீ நீராட
( நீராட்டல் )

## கண்ணன் ஒரு இன்பத் தொல்லை

தெருவில் சென்றாய் விளயாட என்று சொல்லியே⋆
திரும்பி வந்தாய் உடல் முழுதும் புழுதி சூழவே⋆
விரும்பி உன்னை சீராட்டும் இன்பத் தொல்லையே⋆
திருவின் திரு வர வேண்டும் கண்ணா நீ நீராட (1)

## எட்டாத பரமனும் எட்டும் கண்ணனும்

நான் மறைகள் ஓடித் தேடும் நாரணன் நீ⋆
தேன் பெருகும் எட்டெழுத்தின் காரணம் நீ⋆
வான் அடுத்து வையம் அளந்த வாமனன் நீ⋆
ஊன்றி நின்று வர வேண்டும் கண்ணா நீ நீராட (2)

## கண்ணனே பரமன்

பிறக்க பிறக்க பளபளக்கும் மேன்மை உன்னதே⋆
அளக்க அளக்க அளவிலா அழகும் உன்னதே⋆
மறக்க மறக்க மயக்குகின்ற மாயை உன்னதே⋆
சிரிக்க சிரிக்க வர வேண்டும் கண்ணா நீ நீராட (3)

## கண்ணனே அவதாரங்கள்

வில் பிடித்து எழுந்த தழும்பு விரைவில் ஆறவே⋆
கல் பிடித்து குடை கொடுத்த நோவு போகவே⋆
சொல் பிடித்து ஏற்ற சீற்றம் சற்று தணியவே⋆
இல் பிடித்து வர வேண்டும் கண்ணா நீ நீராட (4)

www.prapatti.com

### கண்ணன் பல அவதாரங்களாய் காத்தல்

அன்று பூமி கிடர்ந்து இடர்ந்தாய் அச்சம் தீரவே⋆
 சென்று பூமி வென்று வந்தாய் வண்மை ஏற்கவே⋆
இன்று பூமி பரந்து திரிந்தாய் இலகு காட்டவே⋆
 நன்று இரங்கி வர வேண்டும் கண்ணா நீ நீராட (5)

### கண்ணனுக்குக் காப்பு

ஒரு கோணத்து இரு ராமனும் கள்ள அழகனே⋆
 திரு வோணம் வந்து உதிக்க தீயவை சரிந்ததே⋆
முக் கோணம் அங்கு அமர்த்தி காப்பு காணவே⋆
 எக் கணமும் காக்க வேண்டும் கண்ணா நீ நீராட (6)

### கண்ணன் நீராட்டம்

திங்கள் தோற்கும் திருமுகம் காட்ட வேண்டியே⋆
 இங்கு மங்கும் அலைந்தது இன்னருள் சுரக்கவே⋆
தங்கித் திகழும் திருவுடன் பொங்கும் பரிவிலே⋆
 எங்கள் மாசு போக வேண்டும் கண்ணா நீ நீராட (7)

### கண்ணன் அருளும் பரமபதம்

புகையின் பின்னே புகுந்திருந்து கீழ் இறங்கவே⋆
 குகையின் உள்ளே குலவுகின்ற சிங்கம் போலவே⋆
பகை கெடுத்து பரமபதம் பகிர்ந்து கொள்ளவே⋆
 நகை விடுத்து தர வேண்டும் கண்ணா நீ நீராட (8)

www.prapatti.com

## வர வேண்டும் கண்ணா நீ பூச்சூட
## ( பூச்சூடல் )

### கண்ணனே இங்கு இன்பம்

விண்ணை விட்டு கீழே வந்த வேத மூலமே⋆
பண்ணுடன் உன்னைப் பாடும் புண்ணிய காலமே⋆
மண்ணிலே அருள் செய்யும் மலர் மகள் நாதனே⋆
கண் குளிர வர வேண்டும் கண்ணா நீ பூச்சூட (1)

### கண்ணனின் வீரச் செயல்கள்

அன்று மரம் முறித்து எட்டி அரக்கனை உதைக்கவே⋆
கொன்று யானையை ஒரு கன்றை விட்டு எறியவே⋆
வென்று காளை ஏழையும் சென்று மணம் புரியவே⋆
இன்று காண வர வேண்டும் கண்ணா நீ பூச்சூட (2)

### கண்ணனே பிறப்பு அறுப்பவன்

பார்த்தன் தேர் ஊர்ந்து பரியின் வாய் பிளந்து⋆
பேர் ஆயிரம் உடைய பிறப்பு அறுக்கும் பிரானே⋆
தீர்த்தனே தூமலர் கொண்டு ஏத்தவே உன்னை⋆
பூர்த்தியாக வர வேண்டும் கண்ணா நீ பூச்சூட (3)

### கண்ணனும் மலையும்

மலை எடுத்துக் காத்ததும் முதுகின் மேல் சுமந்ததும்⋆
மலையால் கடல் அடைத்து மலை மேல் நின்றதும்⋆
மலை போல் திருமேனி அதில் மலர்மாலை அணிந்து⋆
அலை மகளோடு வர வேண்டும் கண்ணா நீ பூச்சூட (4)

## கண்ணா எல்லோருடன் சேர்ந்து வருவாய்

பறவை மேல் விரைந்து வரும் பாற்கடல் பரமனே⋆
குரவை கூத்தாடி களித்து இருக்கும் கோவலனே⋆
கற்றினம் மேய்த்துக் கையில் சங்கேந்தி உரைத்து⋆
நற்றினம் சேர வர வேண்டும் கண்ணா நீ பூச்சூட (5)

## கண்ணனின் திருநாமம் எல்லாம் அளிக்கும்

தெரியாது தொட்டாலும் சுடுவது தீ போலே⋆
அறியாது சொன்னாலும் அருள்வது திருநாமமே⋆
வெறி கமழும் மல்லியுடன் வனமாலை ஏற்கவே⋆
திருவுடன் வர வேண்டும் கண்ணா நீ பூச்சூட (6)

## கண்ணனுக்கு எட்டு விதமான பூக்கள்

தீங்கு இழையாது தவம் இரக்கம் பொறுமையுடன்⋆
ஓங்கு புலன் அடக்கி ஓர் நினைவோடு நல்லறிவு⋆
தங்கு மெய் என்றுமிவை துய்ய மலர் எட்டுமென⋆
இங்கு பெற வர வேண்டும் கண்ணா நீ பூச்சூட (7)

## கண்ணனுக்கு ஸமர்ப்பித்தல்

நறுந்துழாய் மாலை நற் சாந்தம் புகை தீபத்துடன்⋆
பிருந்தாவன மாயனே பரிந்து வந்து ஏற்பாயே⋆
மருந்தாகி நீர்மையுடன் மேலான கருந் தெய்வமே⋆
விருந்து பெற வர வேண்டும் கண்ணா நீ பூச்சூட (8)

www.prapatti.com

## வர வேண்டும் கண்ணா நீ விளையாட
## ( விளையாடல் )

### கண்ணன் பல அவதாரங்களாய் காத்தல்

வேதங்கள் மூழ்கி செல்ல மீட்டுக் கொடுக்கவே⋆
    பேதங்கள் பல இருக்க திருப் பாதம் காட்டவே⋆
குறள் உருவாய் வாமனனாய் வான் அளக்கவே⋆
    மருள் நீக்க வர வேண்டும் கண்ணா நீ விளையாட (1)

### கண்ணன் பிராட்டியுடன் சுலபனாய் நிற்றல்

தேவர் குழாம் தேடித் தேடி திகைத்து மலைக்கவே⋆
    மூவராய் முதல்வனாய் என் முன்னே நிற்கவே⋆
பூ வளரும் திரு மகளும் சேர்ந்து இருக்கவே⋆
    யாவர்க்கும் வர வேண்டும் கண்ணா நீ விளையாட (2)

### கண்ணா நீதான் ராமன்

கூனியின் முதுகிலே அம்பு கோத்த நீ⋆ இந்தப்
    பாவியின் மனதிலே அன்பு கொள்ளவே⋆
தந்தை சொல்லை ஏற்று கானம் சென்ற நீ⋆
    விந்தை செய்ய வர வேண்டும் கண்ணா நீ விளையாட (3)

### விஷமக் கண்ணா, நீதான் நரசிம்மன்

தட்டிய தூண் பிளக்க திடுக்கெனத் தோன்றவே⋆
    எட்டி நின்ற பாலனும் ஏவலுடன் ஏத்தவே⋆
கட்டெறும்பு கன்றின் காதில் விட்டு ஓட்டியே⋆
    சுட்டிப் பயலே வர வேண்டும் கண்ணா நீ விளையாட (4)

www.prapatti.com

### கண்ணா, ராமனாய் நீ செய்த வேடிக்கை

ஆசை கொண்ட அரக்கி அவள் உன்னை அணுகவே⋆
தாஸ முதல்வன் தம்பியிடம் திருப்பி அனுப்பவே⋆
நப்பின்னை நாணி நிற்க நம்பி சிரிக்கவே⋆
சப்பாணி ஆட வேண்டும் கண்ணா நீ விளையாட (5)

### கோபியர் ஆடைகளைக் கவர்தல்

நீராடச் சென்ற பெண்கள் ஆடையைத் திருடியே⋆
போராடி வருந்தித் தாமும் கையெடுத்து கூப்பவே⋆
ஓடி உருள உரலிலே உன் கட்டுண்ட காட்சியே⋆
தேடிக் காண வேண்டும் கண்ணா நீ விளையாட (6)

### கண்ணனின் ராஸக் கிரீடை

இசையோடு குழல் ஊதி உந்தன் இன்ப மயக்கமே⋆
அசைந்து ஆடும் கோபியர் வளையின் ஒலி தாளமே⋆
பல உருவாய் பெண் அனைத்திலும் நெருங்கி மகிழவே⋆
நலம் மிக ஆட வேண்டும் கண்ணா நீ விளையாட (7)

### கண்ணன் வாய் உள்ளே உலகம் அனைத்துமே

உண்ட மண்ணை மாயன் காட்ட வாய் திறக்கவே⋆
அண்ட சராசரம் அனைத்தும் அதனுள் அடக்கமே⋆
நீண்ட கண்ணாள் யசோதை பெற்ற இன்பமே⋆
தொண்டர் காண வேண்டும் கண்ணா நீ விளையாட (8)

www.prapatti.com

## என் கண்ணே தாலேலோ
## ( பள்ளி கொள்ளல் )

### கண்ணா உன்னை நினைத்து அஞ்சுகிறேன்

சென்ற இடம் எல்லாம் வம்பு கொண்டாய் மாதவா⋆
வென்ற பகை முற்றும் யார் அறிவார் வேங்கடவா⋆
கன்று மேய்த்து உகந்தாய் கார் குழல் கேசவா⋆
இன்று போதும் இவை என் கண்ணே தாலேலோ (1)

### கண்ணா நீயே பரமன்

பாதம் எடுத்து வான் அளந்த பரந்தாமா⋆
வேதம் வந்து தாலாட்டு பாட வேண்டுமா⋆
காதல் கொண்டு கதறுகிறேன் கண் மணியே⋆
ஆதலால் போதும் இவை என் கண்ணே தாலேலோ (2)

### கண்ணனை பற்றி முறையீடு

எல்லை உண்டோ அன்னைமார் எண்ணிறத்த பட்டியல்⋆
தொல்லை செய்தாய் நீயென்று தொடுக்கின்ற முறையீடு⋆
சொல்லினால் சூடு பட்டேன் சோதனை தாளவில்லை⋆
அல்லல் பட்டது போதும் என் கண்ணே தாலேலோ (3)

### கண்ணனை பற்றி தூற்றல்

எள்ளி நகைத்து பேசியே உன் வாசனை தூற்றியே⋆
தள்ளிப் போயென அறியாதார் குற்றமெல்லாம் சாற்றியே⋆
பள்ளி கொண்ட பெருமானே பதறுகின்ற அன்னை நான்⋆
அள்ளி அணைக்க அருகே என் கண்ணே தாலேலோ (4)

www.prapatti.com

### கண்ணா உன்னை நினைத்து அஞ்சுகிறேன்

வஞ்சகப் பெண் தாயாகி வந்து உன்னை அணைக்கவே⋆
அஞ்சுகிறேன் அச்சுதா அவள் போல் எத்தனையோ⋆
நெஞ்சுருகி வேண்டுகிறேன் நெடுமாலே கிடப்பாயோ⋆
துஞ்ச வேண்டி அழைத்தேன் என் கண்ணே தாலேலோ (5)

### கண்ணா எங்கும் போகாதே, இங்கே இரு

ஏழை நான் புலம்பினேன் ஏசுகின்றார் என் மகனை⋆
சூழ்ந்து நின்று புறம் பேசும் பாழும் மக்கள் ரோதனை⋆
போக வேண்டாம் எங்கும் பொல்லாங்கும் வேண்டாம்⋆
ஆகவே உறங்காயோ என் கண்ணே தாலேலோ (6)

### நான் என்ன தருவேன் ?

ஆலிலையில் துயில் கொண்டாய் அனைத்துக்கும் பின்னே⋆
பாற்கடலில் பள்ளி கொண்டாய் பாம்பணை மெத்தையிலே⋆
வான்வீடு வந்து அமர்ந்தாய் விண்ணவர் பணி செய்யவே⋆
நான் என்ன தருவேனோ? என் கண்ணே தாலேலோ (7)

### மாதவனே உறங்காயோ

விடம் கலந்த நாகம்மேல் நடனம் செய்த திருநாரணா⋆
வடமலையில் விடுதலை தரும் விஷ்ணுவே வாசுதேவா⋆
குடங்கள் மேல் கூத்து செய்த அரங்கனே கோவிந்தா⋆
கடல் கடைந்த மாதவனே என் கண்ணே தாலேலோ (8)

www.prapatti.com